

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (8.12.2024) திரைப்பட நடிகரும், 'உழவன்' அமைப்பின் நிறுவனருமான சி.கார்த்தி சந்தித்து ஃபெஞ்சல் புயல் கனமழையைத் தொடர்ந்து தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான அரசு மேற்கொண்டு வரும் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளுக்கு துணை நிற்கும் வகையில் "முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு" 15 லட்சம் ரூபாய்க்கான காசோலையை வழங்கினார்.



தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (8.12.2024) நாம் தமிழர் கட்சியின் மயிலாடுதுறை நாடாளுமன்ற தொகுதி பொறுப்பாளர் சு.கலியபெருமாள் சந்தித்து, திராவிட முன்னேற்றக் கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டார். உடன் மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளரும், சட்டமன்ற உறுப்பினருமான நிவேதா முருகன் உள்ளார்.

## 4 நாட்களுக்கு கனமழை!

## முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள அரசு அறிவுறுத்தல்!

சென்னை, டிச. 10 -

சென்னை, தென் மேற்கு வங்கக்கடலில் உருவான ஃபெஞ்சல் புயல் காரணமாகத் தமிழகத்தின் வட மாவட்டங்களில் தொடர்ந்து கனமழை பெய்தது. இதனால் விழுப்புரம், கடலூர், கள்ளக்குறிச்சி, தருமபுரி, கிருஷ்ணகிரி, திருவண்ணாமலை உள்ளிட்ட மாவட்டங்களின் பல்வேறு இடங்களில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டு கடுமையாகப் பாதிக்கப்பட்டன.

இந்த சூழலில் தென்கிழக்கு வங்கக்கடல் மற்றும் பூமத்திய ரேகையை ஒட்டிய இந்திய பெருங்கடல் பகுதியில், காற்றழுத்த தாழ்வு பகுதி உருவானது. இது நேற்று முன்தினம் வலுவடையும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், இந்த அமைப்பு வலுவடையாமல், அதே பகுதியில் நிலை கொண்டுள்ளது.

அடுத்த 24 மணி நேரத்தில் இது மேலும் வலுவடைந்து மேற்கு, வடமேற்கு திசையில் தமிழகம் மற்றும் இலங்கை கடலோர பகுதிகளை நோக்கி நகரலாம். இதன் காரணமாக, இன்று முதல் வருகிற 13ந் தேதி வரை 4 நாட்களுக்கு தமிழ்நாட்டில் டெல்டா மற்றும் வட மாவட்டங்களில் சில இடங்களில் கனமழைக்கும், ஓரிரு இடங்களில் மிக கனமழை வரைக்கும் பெய்ய வாய்ப்பு இருப்பதாகவும் கூறப்பட்டுள்ளது.

இந்நிலையில் மிக கனமழை எச்சரிக்கை எதிரொலியாக முன்னெச்சரிக்கை பணிகளை மேற்கொள்ளவும், பேரிடர்களை எதிர்கொள்ளவும் அனைத்துத் துறைகளும் தயார் நிலையில் இருக்க வேண்டும் என மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் சென்னை மாநகராட்சி ஆணையருக்கு பேரிடர் மேலாண்மைத் துறை அறிவுறுத்தி உள்ளது.

இதுதொடர்பாக வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கையில், "நிலையான வழிகாட்டு விதிமுறைகளின்படி பேரிடர்களை எதிர்கொள்ள அனைத்துத் துறைகளும் தயார் நிலையில் இருக்க வேண்டும்" என்றும், "எதிர்பாராத நிகழ்வுகள் நடைபெற்றால் உடனடியாக பேரிடர் மேலாண்மை துறைக்கு தகவல் தெரிவிக்க வேண்டும்" என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கல்வியில் கிறிஸ்துவத் தொண்டு நிறுவனங்களின் பங்களிப்பு;

# திராவிட இயக்கம் செய்த பங்களிப்புக்கு நிகரானது!

## 'மெட்ராஸ் கிறிஸ்டியன் காலேஜ்' பள்ளி முன்னாள் மாணவர்கள் சந்திப்பில் – துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் உரை!

சென்னை, டிச. 10 -

**"கல்வியில், திராவிட இயக்கம் செய்த பங்களிப்புக்கு நிகரானது கிறிஸ்துவத் தொண்டு நிறுவனங்களின் பங்களிப்பு!" என்று மெட்ராஸ் கிறிஸ்டியன் காலேஜ் பள்ளி முன்னாள் மாணவர்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டார்.**

சென்னை, மெட்ராஸ் கிறிஸ்டின் காலேஜ் மேல்நிலைப்பள்ளியில், 1974-ஆம் ஆண்டு படித்த முன்னாள் மாணவர்களின் பொன் விழா ஆண்டு ஒன்று கூடல் நிகழ்ச்சி நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்துகொண்டு உற்சாக உரை நிகழ்த்தினார்.

துணை முதல்வர் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:-

'மெட்ராஸ் கிறிஸ்டியன் காலேஜ் ஹையர் செகண்டரி ஸ்கூல்' என்ற இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க பள்ளியில், 1974-ஆம் ஆண்டு படித்த மாணவர்களின் பொன்விழா ஆண்டு விழா நிகழ்ச்சிக்கு, என்னை அழைத்து இருப்பதில், எனது மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதில் கலந்துகொள்வதில் மிகுந்த பெருமை அடைகிறேன்.

நம் பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அவர்கள் மூலம்தான், இங்கு அண்ணன் ஸ்ரீதர் வாண்டையார் பேசும்பொழுது சொன்னார். ஒரு ஆறு மாதங்களுக்கு முன்பு முதலமைச்சருடன் இருக்கும் பொழுது, அப்பொழுதே என்னிடம் அவர் தேதி கேட்டார்.

### கண்டிப்பாக வருகிறேன்!

'அலுமினி' கூட்டம் நடத்த வேண்டும் என்று சொன்னார். முதல்வர் சொன்னார், 'நீங்கள் இவரை வைத்து நடத்திக் கொள்ளுங்கள்' என்று என்னைக் கை காட்டி விட்டுச் சென்று விட்டார். அதன் பிறகு, அதை நான் மறந்துவிட்டேன். பிறகு, அவருக்கு சரியாகத் தெரிந்து விட்டது. யாரைப் பிடித்தால் வேலை நடக்கும். அப்படி என்று ஒரு நாள் நம் பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி அவர்களுடன் வந்து இந்த 'அலுமினி அசோசியேசன் பிரசிடெண்ட் ஆக இருக்கக்கூடிய ஸ்ரீதர் வாண்டையார் அவர்கள் இந்த நிகழ்ச்சிக்கு என்னை அழைத்தார். அப்பொழுதும் நான் சொன்னேன். 'சரியாக மழைநேரத்தில் வைக்கிறீர்கள், டிசம்பர் முதல் வாரம் இரண்டாம் வாரம் எல்லாம் சென்னையில் மழை இருக்கும். வெளியூரில் மழை இருக்கும். அதனால், சென்னையில் இருந்தால் கண்டிப்பாக வருகிறேன்' என்று சொன்னேன்.

உங்களுக்கு இயற்கை இன்றைக்கு உதவி இருக்கிறது. ஏனென்றால், சென்ற வாரமும் மழை. அடுத்த வாரமும் மழை இருக்கிறது என்று சொல்லி இருக்கிறார்கள். நானும் நேற்று நள்ளிரவுதான் சென்னைக்கு வந்து சேர்ந்தேன். தேதி கொடுத்து விட்டேன். இரண்டு நாட்களாக, வேலூர், ராணிப்பேட்டையில் அரசு நிகழ்ச்சி, கழக நிகழ்ச்சிகளில் எல்லாம் கலந்துகொண்டு நேற்று நள்ளிரவுதான் சென்னைக்கு வந்தேன். உங்கள் நல்ல நேரம் இன்றைக்கு மழை பெய்யாமல் இருந்திருக்கிறது. அதனால், நீங்கள் எனக்கு நன்றி சொல்வதற்கு முன்பாக, இயற்கை முதலில் நன்றி சொல்லி இருக்க வேண்டும்.

ஏனென்றால், `போன வருடமும் இந்த நிகழ்ச்சியை மழையினால் நடத்தவில்லை' என்று சொன்னார்கள். நான் பிறப்பதற்கு முன்பே இந்தப் பள்ளியில் படித்த மாணவர்களின் 'அலுமினி' கூட்டத்திற்கு என்னை அழைத்து இருக்கிறீர்கள். அங்கு வந்து நான் என்ன பேச போகிறேன். நான் என்ன செய்யப் போகிறேன் என்று வந்தேன். ஆனால், ஸ்ரீதர் வாண்டையார் என் மீதும், தலைவர் மீதும் வைத்திருக்கிற அந்த அன்பிற்குக் கட்டுப்பட்டு வந்து இருக்கிறேன்.

### குடும்பத்தில் ஒருவர்!

அண்ணன் வாண்டையார் அவர்களை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், 'தன் குடும்பத்தில் ஒருவர்' என்று எப்பொழுதுமே சொல்வார். குடும்பத்தில் மட்டும் ஒருவர் இல்லை, எங்கள் கூட்டணியிலும் அவர் ஒருவர். அதனால், அவர் சொன்ன சொல்லைத் தட்ட முடியாது. அதனால், கண்டிப்பாக இந்த நிகழ்ச்சியில் கலந்துகொள்கிறேன் என்று சொல்லி, இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டு உங்களை எல்லாம் சந்திக்கின்ற அந்த வாய்ப்பைப் பெற்று இருக்கிறேன்.

பொதுவாக, பிள்ளைகள் படிக்கின்ற பள்ளிக்கூடத்துக்குத்தான் பெற்றோர்கள் செல்வார்கள். பெற்றோர், ஆசிரியர் கூட்டத்திற்கு கூப்பிடுவார்கள். ஆனால், இங்கே பாருங்க என் அப்பா படித்த பள்ளிக்கூடத்துக்கு என்னை அழைத்து இருக்கிறீர்கள். கம்ப்ளைன்ட் எதுவும் சொல்லவில்லை, கோரிக்கை வைத்திருக்கிறீர்கள். கண்டிப்பாக அந்தக் கோரிக்கைகளை இந்தப் பள்ளிக்கு நிறைவேற்றித் தருவோம்.

பள்ளிக்கல்வித்துறை அமைச்சரே இருக்கிறார், தமிழ்நாட்டின் முதலமைச்சரே உங்கள் மாணவர்தான். கண்டிப்பாக, பள்ளிக்கு என்ன தேவையோ அதைச் செய்து கொடுப்பார்.

எனது அப்பா படித்த இந்த 'மெட்ராஸ் கிறிஸ்டியன் காலேஜ் பள்ளிக்கூடத்து'க்கு வருவதில் மிகுந்த பெருமை அடைகிறேன். இது சாதாரண பள்ளிக்கூடம் இல்லை. நீங்கள் சொன்ன மாதிரி தமிழ்நாட்டின் முதலமைச்சரை உருவாக்கிய பள்ளி இந்த பள்ளி. இந்தப் பள்ளியின் முன்னாள் மாணவரான முதலமைச்சர் அவர்கள்தான் இன்றைக்குத் தமிழ்நாட்டின் இந்நாள் மாணவர்களின் கல்வியைப் பாதுகாத்துக் கொண்டு இருக்கிறார் என்று சொல்லலாம்.

### கொள்கை உறவுகள்!

என் குடும்பத்தின் ரத்த உறவுகள், என் பெரியப்பாகூட இங்குதான் படித்து இருக்கிறார். எனது ரத்த உறவுகள் மட்டுமல்ல, கொள்கை உறவுகளும் இந்தப் பள்ளியில் தான் படித்து இருக்கிறார்கள். இதைப் பார்த்தால், பள்ளி நிகழ்ச்சி மாதிரி இல்லை. ஏதோ ஒரு தலைமைச் செயலகத்தில் நுழைவது போல இருக்கிறது. எல்லா சட்டமன்ற உறுப்பினர்களும் இருக்கிறார்கள். நிறைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் வந்து இருக்கிறார்கள். அந்த அளவிற்கு நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் இந்த மேடையில் உட்கார்ந்து இருக்கிறார்கள்.

நானும் இங்கு படித்திருக்க வேண்டியது தான். 'ஜஸ்ட் மிஸ்' ஆகிவிட்டது. பக்கத்தில் எழும்பூரில் இருக்கின்ற டான் பாஸ்கோ பள்ளியில் படித்தேன். திராவிட இயக்கத் தலைவர்கள் மட்டுமல்ல, காங்கிரஸ், பொதுவுடமை இயக்கத் தலைவர்களும் இங்கு படித்து இருக்கிறார்கள். இந்தியாவில் மட்டுமல்ல, உலகம் முழுவதும் பல பகுதிகளில் கல்வி, அரசியல், தொழில்துறையில் சாதித்த பலர் இந்தப் பள்ளியின் முன்னாள் மாணவர்கள்.

அண்ணன் ஸ்ரீதர் வாண்டையார் அவர்கள் பெருமையாகச் சொன்னார்கள். இங்கு படித்து நிறைய பேர் பெரும் சாதனையாளர்களாகப் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். விளையாட்டு வீரர்களாக உருவாகி இருக்கிறார்கள் என்று சொன்னார். நம் முதலமைச்சரின் எத்தனையோ உரைகளைப் பார்த்து இருக்கிறேன் ரசித்து இருக்கிறேன்.

### முதலமைச்சர் பேசிய உரை!

கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்பு, இந்தப் பள்ளியில் நடந்த முன்னாள் மாணவர்கள் சந்திப்பின்போது நம் முதலமைச்சர் பேசிய உரை இன்னும் என் மனதில் இருந்து விலகவே இல்லை. அந்த அளவிற்கு, தன் பள்ளிக் காலத்தை, அந்த பசுமையான அனுபவங்களை மிகவும் நினைவுகூர்ந்து அழகாகப் பேசியிருந்தார்.

அந்தப் பள்ளி நிகழ்ச்சியில்தான் நம் முதலமைச்சரவர்கள் `நம்ம ஸ்கூல் பவுண்டேஷன்' என்ற ஒரு திட்டத்தை அறிவித்தார். அதன் மூலம் முன்னாள் மாணவர்கள் படித்த அரசு பள்ளிகளை மேம்படுத்த நிதி பங்களிப்புச் செய்யலாம் என்று இந்தப் பள்ளியில் இருந்துதான் அந்த அறிவிப்பு வெளியானது.

இப்போது நம்ம ஸ்கூல் பவுண்டேஷன் வாயிலாக, நூற்றுக்கணக்கான அரசுப் பள்ளிகள் மேம்படுத்தப்பட்டு இருக்கின்றன. எங்களின் விளையாட்டுத் துறையின் சார்பாக, `தமிழ்நாடு சாம்பியன்ஸ் பவுண்டேஷன்' ஆரம்பித்தோம். அதற்கு ஒரு முன்னுதாரணமாக அமைந்ததுதான், இந்த நம்ம ஸ்கூல் பவுண்டேஷன்.

இந்தப் பள்ளி இன்னும் ஒரு பத்து ஆண்டுகளில் 200-வது ஆண்டு விழாவைக் கொண்டாட இருக்கிறது. அது மட்டும் இந்த பள்ளியின் சிறப்பு இல்லை. ஏறக்குறைய 200 ஆண்டுகளுக்கு முன்பே சென்னையில் இருக்கின்ற மாணவர்கள் படிக்க ஒரு பள்ளிக்கூடத்தைக் கட்ட வேண்டும் என்று நினைத்து இருக்கிறார்கள் என்றால், அந்த எண்ணத்தை நாம் நினைத்து பார்க்க வேண்டும்.

### கல்வித் தளத்தில் பங்களிப்பு!

இன்றைக்கு தமிழ்நாடு சமூக நீதி மண்ணாக இருக்கிறது என்றால், அதற்கு நீதிக் கட்சி, திராவிட இயக்க அரசியல் களத்தில் செய்த பங்களிப்பு எவ்வளவு முக்கியமோ, அதே அளவு மெட்ராஸ் கிறிஸ்டியன் காலேஜ் மேல்நிலைப்பள்ளி மாதிரியான கல்வி நிறுவனங்கள், கல்வித் தளத்தில் செய்த பங்களிப்பு மிக மிக முக்கியமானது, தவிர்க்க முடியாதது.








'ஒரு காலத்தில் படித்தாலே தீட்டு என்ற சொன்ன காலத்தில் நீ படிக்கவில்லை என்றால்தான் தீட்டு' என்று சொல்லி பள்ளி, கல்லூரிகளைத் திறந்துவிட்ட கிறிஸ்துவத் தொண்டு நிறுவனங்களின் பங்களிப்பு என்றைக்கும் போற்றுதலுக்குரியது. ஆனால், இன்றைக்கு என்ன நிலைமை. நம் வீட்டுப் பிள்ளைகள் படிக்கக் கூடாது. குலத்தொழில் செய்ய வேண்டும் என்று ஒரு கூட்டம், டெல்லியில் சொல்லிக் கொண்டிருக்கிறது. நான் யாரைச் சொல்கிறேன் என்று தெரியும். 200 வருடத்திற்கு முன்பு சொன்னவர்கள், இன்றைக்கு அதை மீண்டும் சொல்ல ஆரம்பித்து இருக்கிறார்கள்.

பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட வீட்டுப் பிள்ளைகள் வெளியே வருவது, அவர்களால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. 'கல்வி என்றும் அழியாத செல்வம். யாராலும் திருட முடியாத சொத்து' என்று சொல்லி, நம் முதலமைச்சர் அவர்கள் எண்ணற்றத் திட்டங்களை மாணவச் செல்வங்களுக்கு வழங்கிக் கொண்டு இருக்கிறார்.

### எண்ணற்ற திட்டங்கள்!

தமிழ்நாட்டில் ஒரு மாணவருக்குக் கூட கல்வி சென்று சேரவில்லை என்ற நிலை இருக்கக் கூடாது என்று எவ்வளவோ திட்டங்களைச் செய்து கொண்டிருக்கிறார். பள்ளி கல்வித்துறை அமைச்சரும் மிகச் சிறப்பாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறார். 'காலை உணவு திட்டம்', 'புதுமைப்பெண் திட்டம்', 'தமிழ்ப் புதல்வன் திட்டம்', `இல்லம் தேடி கல்வித் திட்டம்', 'நான் முதல்வன் திட்டம்', 'உயர்வுக்குப் படி' இப்படிச் சொல்லிக் கொண்டே போகலாம்.

இதையெல்லாம் நம் பிள்ளைகள், பள்ளிக்கூடத்திற்கு வர வேண்டும். பள்ளிக்கூடம் வந்தால் மட்டும் பத்தாது, பள்ளிக்கூடம் முடித்துவிட்டு, உயர்கல்விக்காக கல்லூரிச் செல்ல வேண்டும் என்பதற்காக கொண்டு வரப்பட்ட திட்டங்கள். அதனால் தான் இப்போது, டெல்லியில் உட்கார்ந்து கொண்டு மாணவர்களைக் கல்லூரியில் இருந்து எப்படி வெளியேற்றலாம் என்று திட்டம் போட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

'விஸ்வகர்மா' என்ற திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அந்தத் திட்டம் என்னவென்றால், திரும்பவும் குலக்கல்வி. அப்பா என்ன வேலை பார்த்தாரோ, தாத்தா என்ன வேலை பார்த்தாரோ அதே வேலையைப் பாரு என்று 'விஸ்வகர்மா' என்ற திட்டத்தை கொண்டு வருகிறார்கள்.

நம் மாணவர்களைக் கல்வியில் இருந்து வெளியேற்றுவதுதான் இந்தத் திட்டத்தின் ஒரே நோக்கம். நம் முதலமைச்சர் தெளிவாக சொல்லி இருக்கிறார். எந்தக் காலத்திலும் எங்கள் தமிழ்நாட்டில் இந்த 'விஸ்வகர்மா' திட்டத்தை, நாங்கள் துவங்க மாட்டோம். எங்கள் குழந்தைகளுக்குப் பள்ளிக் கல்வியை நிச்சயமாகக் கொடுப்போம் என்று சொல்லி இருக்கிறார்.

### கல்வி என்பது அழியாத செல்வம்!

கல்வி என்பது அழியாத செல்வம். எல்லோரிடமும் சென்று சேர்கின்ற நம் திராவிட மாடல் அரசும், நம் முதலமைச்சரும் எந்த எல்லைக்கும் சென்று உங்களுக்காக, மாணவர்களுக்காக உழைக்கத் தயாராக இருக்கிறார். நம் அரசின் இந்த முயற்சிகளுக்கு, உங்களைப் போன்ற நல்ல உள்ளங்கள் ஒவ்வொருவரின் ஒத்துழைப்பும் நிச்சயமாக இருக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த மேடையில் கூட நிறைய மாணவர்கள் கௌரவப்படுத்தப்பட்டு இருக்கிறார்கள். விளையாட்டு வீரர்களுக்கு ஊக்கத் தொகை அளித்து இருக்கிறீர்கள். நிறைய நிதி உதவி எல்லாம் கொடுத்து இருக்கிறீர்கள். அனைவருக்கும் எனது வாழ்த்துகளை இங்கு கூறிக் கொள்கிறேன்.

இன்றைக்கு இங்கு மருத்துவர்களாக, பொறியாளர்களாக, ஆசிரியர்களாக படிப்பால் முன்னேறி இருக்கின்ற நீங்கள், அத்தனை பேரும் நீங்கள் கற்ற கல்வி, அடுத்த தலைமுறைக்குப் பயன்படும் வகையில் இருக்க வேண்டும் என்று செயல்பட வேண்டும் என்று நான் உங்களை எல்லாம் கேட்டுக்கொள்கிறேன்.

முன்னாள் மாணவர்களாகிய நீங்கள் எல்லாம் ஒன்று கூடி, ஏழை எளிய மாணவர்களின் கல்விக்கு, உயர்கல்விக்கு உங்களால் ஆன உதவிகளைத் தொடர்ந்து செய்ய வேண்டுமென்று அன்போடும் உரிமையோடும் கேட்டுக்கொள்கிறேன்.

இங்கு அண்ணன் ஸ்ரீதர் வாண்டையார் அவர்கள் பேசும்போது சொன்னார், `என்ன நான் உட்கார்ந்து சாப்பிட்ட இடத்தில் (மில்லர் ஹால்) ஏ.சி. இருந்தால் எப்படி இருக்கும் என்று நினைத்து பார்த்து, போட்டுக் கொடுத்து விட்டேன்' என்று சொன்னார். அவர் படித்த வகுப்பறைக்கும் அவர் ஏ.சி. போட்டுக் கொடுத்து விட வேண்டும்.

அந்த நிகழ்ச்சிக்கும் என்னை நீங்கள் கூப்பிட வேண்டும். இப்படிப் பல பேர் இந்தப் பள்ளிக்கு பல நன்மைகளை, நலத்திட்டங்களைச் செய்து கொண்டு இருக்கிறீர்கள். மேலும் மேலும் இந்தப் பள்ளி வளர வேண்டும் என்று கேட்டுக் கொண்டு உங்கள் அத்தனை பேருக்கும் மீண்டும் என் கிறிஸ்துமஸ் தின வாழ்த்துக்களை கூறிக்கொண்டு, இந்த வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

இவ்வாறு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

இதில் அமைச்சர்கள் பி.கே.சேகர்பாபு, அன்பில் மகேஷ் பொய்யாமொழி, மூவேந்தர் முன்னேற்றக் கழகத் தலைவர், 1974 ஆம் ஆண்டு படித்த மாணவர் சங்கத் தலைவர் ஸ்ரீதர் வாண்டையார், நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் ஏ.எம்.வி.பிரபாகர் ராஜா, வழக்கறிஞர் இ.பரந்தாமன் மற்றும் பழனிச்சாமி, பள்ளியின் தாளாளர் முனைவர் மனோகர், பள்ளியின் தலைமை ஆசிரியர் ஜெபதாஸ் தினகரன், அருண் மேமன், சையத், வைபவ் வாண்டையார், பகுதிக் கழகச் செயலாளர் சேகர், சுதாகர், கழக மாணவர் அணித் தலைவர் ராஜீவ் காந்தி, ராஜா திருமாறன் உள்பட ஏராளமான மாணவர்கள் கலந்துகொண்டனர்.



மதுரை மாநகர் மாவட்ட தி.மு.க. செல்லூர் பகுதி கழகம் சார்பில் துணை முதலமைச்சர், கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த தினத்தை முன்னிட்டு செல்லூர் கண்மாயைச் சுற்றி பொதுமக்கள் நடை பயிற்சி மேற்கொள்ள போடப்பட்ட பாதையை சுற்றி உள்ள குப்பை செடிகள் போன்றவற்றை பகுதி கழகச் செயலாளர் செல்லூர் குரும்பன் தலைமையில் 100க்கும் மேற்பட்டோர் சேர்ந்து சுத்தம் செய்யும் பணியினை மதுரை மாநகர் மாவட்டச் செயலாளர் கோ. தளபதி எம்.எல்.ஏ. துவக்கி வைத்தார். உடன் கழக நிர்வாகிகள் அக்ரி கணேசன், மூவேந்திரன், பவர் மணிகண்டன், கருப்பு ராஜ், தாய் முரளி, முத்து மோகன், தமிழ் சந்திரன் மற்றும் திரளான கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



திண்டுக்கல்லில் தொ.மு.ச. பேரவை தமிழ் மாநில குழு தலைவர் ம.பசீர்அகமது நினைவேந்தல் நிகழ்ச்சி கிழக்கு மாவட்டச் செயலாளர் இ.பெ.செந்தில்குமார் எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற்றது. நிகழ்ச்சியில் சட்டமன்ற உறுப்பினர் காந்திராஜன் கலந்து கொண்டு பேசினார். மாவட்ட தொ.மு.ச. கவுன்சில் செயலாளர் அழகர்சாமி வரவேற்புரையாற்றினார் மாவட்ட அவைத்தலைவர் காமாட்சி, துணைச்செயலாளர்கள் பிலால் உசேன், மார்க்கரேட்மேரி, மாநகரச் செயலாளர் ராஜப்பா, மேயர் இளமதி ஜோதிபிரகாஷ், பொதுக்குழு உறுப்பினர் அக்பர், திண்டுக்கல் கிழக்கு பகுதிச் செயலாளர் இராஜேந்திர குமார், வடக்கு பகுதிச் செயலாளர் ஜானகிராமன், வடக்கு ஒன்றியச் செயலாளர் செழியன், தெற்கு ஒன்றியச் செயலாளர் வெள்ளிமலை உள்ளிட்ட பலர் அஞ்சலி செலுத்தினர்.